வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்- வான்மதி

தேதி 22.09.2024 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, குவாட் உச்சி மாநாட்டிற்கு இடையே உலகத் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி முன்னிலையில், தூய்மை பொருளாதார ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

இந்தியா, ஊழலற்ற நிர்வாகம் காரணமாக முன்னேறி உள்ளதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் கூறியுள்ளார்.

காரைக்காலில், பள்ளி மாணவர்கள் பங்கேற்ற மாநில அளவிலான, விளையாட்டுப் போட்டிகள், இன்று நடைபெற்றன.

ஜார்ஜியாவில் நடைபெற்ற, காமா சர்வதேச மல்யுத்தப் போட்டியில் இந்திய வீரர் சங்ராம் சிங், சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

---------------------------

*மோடி-அமெரிக்கா (18)*

3 நாள் அரசுமுறைப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, அங்கு நடைபெறும் குவாட் தலைவர்களின் உச்சி மாநாட்டிற்கு இடையே, அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடனுடன், நேற்றிரவு டெலவாரே-யில், இருதரப்பு உறவுகள் குறித்து, கலந்துரையாடினார். இந்தியா, அமெரிக்கா இடையே, விரிவான, உலகளாவிய வியூக ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் புதிய வழிமுறைகளை அடையாளம் காண்பது குறித்து, இருதலைவர்களும் விவாதித்தனர். இந்த சந்திப்பு, மிகுந்த பயனுள்ளதாக அமைந்ததாக திரு. நரேந்திர மோடியும், இந்தியாவுடனான கூட்டாண்மை, வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத அளவில், வலிமை மற்றும் நெருக்கமடைந்துள்ளதாக, திரு. ஜோ. பைடனும், சமூக பக்கங்களில் கருத்து பதிவிட்டுள்ளனர். குவாட் உச்சி மாநாட்டிற்கு இடையே, பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலிய நாட்டு பிரதமர்களுடனும் கலந்துரையாடினார்.

பிரதமர் மோடி, இன்றிரவு நியூயார்க்கில், இந்திய சமூகத்தினரிடையே உரையாட உள்ளார். மேலும், இந்திய-அமெரிக்க நிறுவனங்களுக்கு இடையே தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த, அந்நாட்டு முன்னணி நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளுடன் கலந்துரையாட உள்ளார்.

----------------------------

*ஒப்பந்தம் (11)*

இந்தியா, அமெரிக்காவின் டெலாவேர் மாகாணத்தின் வில்மிங்டன் நகரில் நடைபெற்ற இந்தோ-பசிபிக் பொருளாதார கட்டமைப்பின் நேர்மையான மற்றும் தூய்மையான பொருளாதார ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. குவாட் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி முன்னிலையில், நேற்று இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. தூய்மை பொருளாதாரத்திற்கான இந்த ஒப்பந்தம், தொழில்நுட்பக் கூட்டுறவு, தொழிலாளர் முன்னேற்றம், திறன் கட்டமைப்பு, மற்றும், ஆராய்ச்சி ஒத்துழைப்பு உள்ளிட்டவையின் மேம்பாட்டிற்கு வழிவகை செய்யும். சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் சலுகை நிதி உள்ளிட்ட திட்ட நிதி, முதலீட்டு வசதிகளுக்கும் உதவியாக இருக்கும்.

----------------------------

*நாடாளுமன்றம்-மாநாடு* (9)

10ஆவது காமன்வெல்த் நாடாளுமன்றக் குழுவின் மாநாடு, புதுடெல்லியில் நாளை தொடங்குகிறது. 2 நாட்கள் நடைபெறும் இந்திய பகுதிக்கான இந்த மாநாட்டை, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தலைமையேற்று நடத்துவார். மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 25 சபாநாயகர்கள், 14 துணை சபாநாயகர்கள், முதன்மைச் செயலர்கள், அரசு செயலர்கள் மற்றும் அதிகாரிகள், இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். நிலையான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை எட்டுவதில், சட்டமன்ற அமைப்புகளின் பங்கு என்ற கருத்தின் அடிப்படையில் இம்மாநாடு நடைபெற உள்ளது.

----------------------------

*ஃபுட் இந்தியா* (16)

உலக உணவு இந்தியா மாநாடு 2024 இன்று நிறைவு பெற்றது. சுமார் 90 நாடுகள், 26 மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள், 18 மத்திய அமைச்சகங்கள் மற்றும் அதனை சார்ந்த அரசு அமைப்புகள் கலந்து கொண்ட இந்த 4 நாள் மாநாடு, சென்ற 19ஆம் தேதி முதல் புதுடெல்லி பாரத்

மண்டபத்தில் நடைபெற்றது. உணவுப் பதப்படுத்துதலில் இந்தியா உலகளாவிய சக்திக் கேந்திரமாக வளர்ந்து வருவதை தெளிவுப்படுத்தும் விதமாக இந்த மாநாடு அமைந்தது. உணவு பதப்படுத்தும் துறையில், கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பம், நிலைத் தன்மை உள்ளிட்டவைகளை ஒருங்கிணைக்கும் நோக்கத்தோடு இந்த மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாட்டின் துவக்க நாளில் நடைபெற்ற தலைமை செயல் அதிகாரிகள் வட்ட மேசை மாநாட்டிற்கு மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் மற்றும் உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் தலைமை வகித்தனர். தொழிற்சாலைகள் மற்றும் அரசுக்கு இடையேயான இடைவெளியை அகற்றவும், அவற்றிற்கு இடையேயான பிரச்சனைகளுக்கு தீர்வு கானும் முயற்சிகளும் இம்மாநாட்டில் மேற்கொள்ளப்பட்டன.

---------------------------

*தொழிலாளர் கொள்கை (10)*

நாட்டில் உள்ள வணிக மற்றும் வர்த்தக நிறுவனங்கள், தங்களது பணி கலாச்சாரம், வேலை வாய்ப்பு கொள்கைகள் மற்றும் அதன் சட்டத்திட்டங்களை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று, தேசிய மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்தி உள்ளது.

புனேயில், தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்து வந்த கேரளாவைச் சேர்ந்த பெண் பட்டயக் கணக்காளர் ஒருவர், கூடுதல் பணிச் சுமைக் காரணமாக உயிரிழந்தது தொடர்பாக கவலை வெளியிட்டுள்ள ஆணையம், உலக மனித உரிமைகள் அமைப்பு கொள்கைக்கு ஒப்பான வேலை வாய்ப்பு கொள்கைகளை வகுக்குமாறு நிறுவனங்களை அறிவுறுத்தி உள்ளது.

---------------------------

*இலங்கை (10)*

இலங்கையில், அதிபர் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை, பலத்த பாதுகாப்புக்கு இடையே நடைபெற்று வருகிறது. தேசிய மக்கள் சக்தி கட்சயின் தலைவர் திரு. அனுரா குமார திஸ்சநாயகே வாக்கு எண்ணிக்கையில் முன்னிலையில் உள்ளார். இவர், 22 மாவட்டங்களில் பதிவான தபால் ஓட்டுக்களில், 50 சதவிகிதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்றுள்ளதாக, அந்நாட்டின் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. வாக்கு எண்ணிக்கையில், திரு. அனுரா குமார திஸ்சநாயகே, 39 சதவிகித வாக்குகளும், அவருக்கு அடுத்தபடியாக, திரு. சஜித் பிரேமதாசா, 34 சதவிகித வாக்குகளும், தற்போதைய அதிபர் திரு. ரணில் விக்ரம சிங்கே 17 சதவிகித வாக்குகளும் பெற்றுள்ளதாக, தகவல்கள் தெரிவிக்கின்றன.

---------------------------

*நிர்மலா சீத்தாராமன்* 1 (17)

ஊழலற்ற நிர்வாகம் காரணமாக, இந்தியா, முன்னேற்றம் கண்டுள்ளதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் கூறியுள்ளார்.

மத்திய அரசு கடந்த 10 ஆண்டுகளில், நாட்டின் பல்வேறு துறைகளில் பல முன்னேற்றங்களை கொண்டு வந்துள்ளதாக, புதுச்சேரியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், திருமதி நிர்மலா சீத்தாராமன் கூறியுள்ளார். கடற்கரை சாலையில் அரபிந்தோ சொசைட்டி அரங்கில் நடைபெற்ற 3 நாள் இலக்கிய திருவிழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர், தேசப் பாதுகாப்பு மிக முக்கியம் என்றும், அதன் மூலமே பொருளாதார மேம்பாடு அடையும் என்றும் தெரிவித்தார். தேசப் பாதுகாப்பிற்கான செலவினங்களில் மத்திய அரசு ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளாது என்று கூறிய அமைச்சர், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள் மேம்பாட்டிற்காக மத்திய அரசு போராடி வருவதாகவும், கடந்த 10 ஆண்டுகளில், ஸ்மார்ட் ஃபோன், மின்னணு பொருட்களின் ஏற்றுமதி உள்ளிட்டவைகளில் இந்தியா, பண்மடங்கு முன்னேறி உள்ளதாகவும் தெரிவித்தார். சிறு, குறு தொழில்களின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்துத் திட்டங்களையும் மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும், செயற்கை நுண்ணறிவுத் துறை உள்ளிட்ட நாட்டின் 500 *நிர்மலா சீத்தாராமன்* 2 (12)

முன்னணி நிறுவனங்களில் இளைஞர்கள் பயிற்சி பெற மத்திய அரசு நடடிக்கை எடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார். ஊழல் இல்லாத நிர்வாகத்தின் காரணமாகத்தான், இவை அனைத்தும் சாத்தியமாகி, கடந்த 10 ஆண்டுகளில், மத்திய அரசு பல்வேறு முன்னேற்றங்களை கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

முன்னதாக, புதுச்சேரி வந்த மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமனை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி உள்ளிட்டோர் சந்தித்து, உரையாடினர். ராஜ் நிவாசில் மரியாதை நிமித்தமாக நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், தலைமைச் செயலர் திரு. சரத் சவுகான், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

---------------------------

*காரைக்கால்-விளையாட்டு* (12)

மாநில அளவிலான, விளையாட்டுப் போட்டிகள், இன்று, காரைக்கால் மாவட்ட விளையாட்டு அரங்கில் துவங்கியது. புதுச்சேரி அரசு பள்ளிக் கல்வித் துறை, விளையாட்டு மற்றும் இளைஞர் நல இயக்குநரகம் சார்பாக, நடைபெறும் இந்த போட்டிகளில், புதுச்சேரி, காரைக்கால், ஏனாம், மற்றும், மாஹியைச் சேர்ந்த 576 பள்ளி மாணவ-மாணவியர் பங்கேற்கின்றனர். கைப்பந்து, கை உந்துப்பந்து, கால்பந்து, சதுரங்கம் உள்ளிட்ட போட்டிகள் நடைபெற உள்ளன. மாவட்ட பொதுப் பணித் துறை கண்காணிப்பு பொறியாளர் திரு. சந்திரசேகரன் சிறப்புரையாற்றி, துவக்கி வைத்த இந்த போட்டிகளின் துவக்க விழாவில், முதன்மை கல்வி அதிகாரி திருமதி விஜய மோகனா தலைமை உரையும், விளையாட்டுத் துறை துணை இயக்குநர் திரு. வைத்தியநாதன் வரவேற்புரையும் வழங்கினர்.

---------------------------

*சங்ராம்* (8)

ஜார்ஜியாவில் நடைபெற்ற, காமா சர்வதேச மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் மல்யுத்த வீரர் சங்ராம் சிங், சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். இன்று நடைபெற்ற களப்பு தற்காப்புக் கலை மல்யுத்தப் போட்டியில், பாகிஸ்தான் வீரர் அலி ரசா நசீரை எதிர்கொண்ட இந்திய வீரர் சங்ராம் சிங், 90 வினாடிகளில், வெற்றி பெற்று, இத்தகைய களப்புப் போட்டிகளில் வெற்றி பெறும் முதலாவது இந்திய ஆடவர் மல்யுத்த வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார். மேலும், 93 கிலோ எடைப் பிரிவில், மிக விரைவில் வெற்றி பெற்ற இந்திய வீரர் என்ற சாதனையையும் நிகழ்த்தி உள்ளார்.

---------------------------

*கிரிக்கெட்* (16)

இந்திய-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையே, சென்னை எம்.ஏ சிதம்பரம் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற முதல் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில், இந்திய அணி, பங்களாதேஷ் அணியை, 280 ரன் வித்தியாசத்தில் வெற்றி கொண்டுள்ளது. முன்னதாக, இந்திய அணி முதல் இன்னிங்சில் 376 ரன்னும், 2ஆவது இன்னிங்சில், 4 விக்கெட் இழப்பிற்கு 287 ரன்னும் எடுத்து டிக்லேர் செய்தது. பங்களாதேஷ் அணி தனது முதல் இன்னிங்சில், 149 ரன்னும், 2ஆவது இன்னிங்சில் 234 ரன்னும் எடுத்திருந்தது. இந்திய தரப்பில், முதல் இன்னிங்கில் ரவிச்சந்திரன் அஷ்வின் 113 ரன்னும், ரவீந்திர ஜடேஜா 86 ரன்னும் எடுத்தனர். ஜஸ்ப்ரித் பும்ரா 4 விக்கெட்டை கைப்பற்றினார். 2ஆவது இன்னிங்சில், சுப்மன் கில் ஆட்டமிழக்காமல் 119 ரன்னும், ரிஷப் பன்ட் 109 ரன்னும் எடுத்தனர். அஷ்வின் 6 விக்கெட்டும், ஜடேஜா, 3 விக்கெட்டும்

வீழ்த்தினர். பங்களாதேஷ் அணியில், 2ஆவது இன்னிங்சில், நஜ்முல் உசேன் 82 ரன்னும், ஷத்மன் இஸ்லாம் 35 ரன்னும் எடுத்தனர். 2 போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில், இந்தியா 1க்கு பூஜ்யம் என்ற புள்ளிக் கணக்கில் முன்னிலையில் உள்ளது.

----------------------------

*ஜம்மு-காஷ்மீர் (7)*

ஜம்மு-காஷ்மீரின் ஆர்எஸ் புரா சர்வதேச எல்லைக் கோட்டின் அருகே, பயங்கரவாதிகளின் ஊடுருவலை, எல்லைப் பாதுகாப்புப் படையினர் முறியடித்துள்ளனர். நேற்றிரவு ஆர்எஸ். புரா பகுதி அருகே, பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பிஎஸ்ஃஎப் வீரர்கள், சர்வதேச எல்லைக் கோடு அருகே ஊடுருவ முயன்ற பயங்கரவாதியிடம் இருந்து, ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகளை கைப்பற்றியதாக பிஎஸ்ஃஎப்-ன் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

----------------------------

*விபத்து (6)*

உத்தரபிரதேச மாநிலம் கான்பூர் தேகாத் மாவட்டத்தின் ராணியா தொழில் பேட்டை பகுதியில், படுக்கைகள் தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி, 6 பேர் உயிரிழந்ததாகவும், மேலும் பலர் தீக்காயம் அடைந்ததாகவும் மாவட்ட காவல் துறை தெரிவித்துள்ளது. மின் கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கக் கூடும் என்று முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, குவாட் உச்சி மாநாட்டிற்கு இடையே உலகத் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி முன்னிலையில், தூய்மை பொருளாதார ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

இந்தியா, ஊழலற்ற நிர்வாகம் காரணமாக முன்னேறி உள்ளதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் கூறியுள்ளார்.

காரைக்காலில், பள்ளி மாணவர்கள் பங்கேற்ற மாநில அளவிலான, விளையாட்டுப் போட்டிகள், இன்று நடைபெற்றன.

ஜார்ஜியாவில் நடைபெற்ற, காமா சர்வதேச மல்யுத்தப் போட்டியில் இந்திய வீரர் சங்ராம் சிங், சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.